1

**K.M ENTERPRISES**
No.283,Court Road,Trincomalee,
Sri Lanka.
Mob : 071 8604881 E-mail : munafiobs88@yahoo.com
Tel: : 026 2222479
Abans Office Automation
- LCD TV, LED TV, 3D TV
- ஹோம் தியேட்டர்ஸ்
- குளிர் ஊட்டி
- மொபைல் போன்
- கணனி மற்றும் மடிக்கணனி
- சலவை இயந்திரம்

மற்றும் உங்களுக்கு தேவையான சகல மின் உபகரணங்களும் இப்போது திருக்கோணமலையில் ஒரே கூரையின் கீழ்
எம்மிடம் குறைந்த முற்கொடுப்பனவு மற்றும் வட்டியில்லாத 2/6/12/18 மாத கால தவணைக் கொடுப்பனவு முறை
இன்றே விஜயம் செய்யுங்கள்!!!



ஆவணி மாதம் 28ம் திகதி August 12, 2012

# மலைமுரசு®

MALAIMURASU

அறைவு 01 இயம் 03

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 பிரதி ஞாயிறு தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ் இப்பிரதி இலவசம்


## தோண்டப்பட்ட நீதிமன்ற வீதி துர்நாற்றமும் விபத்துக்களும்



திருக்கோணமலையின் பிரதான வீதிகளுள் ஒன்றான தபால் நிலையச் சந்தியையும் வில்லூன்றிக் கந்தசாமி கோவில் சந்தியையும் இணைக்கும் வீதி கடந்த ஆறு மாதங்களாக புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வீதியாகவே இருப்பது வர்த்தகர்களுக்கும் பொதுமக்களுக்கும் பெருஞ்சிரமங்களை உருவாக்கியுள்ளது.

சுமார் 200 மீற்றர் நீளமான இப் பிரதான வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கு செல்லும் காலம் பொறுத்துக் கொள்ளத்தக்கதாகவே இல்லை. மைல்கணக்கில் திருத்தப்படும் பெருந்தெருக்கள் கூட சிலநாட்களுக்குள் நிறைவுற்றுவிடும் ஐந்து மாதங்களுக்கு மேல் வெறும் 200 மீற்றர் நீள பிரதான வீதியொன்றைப் புனருத்தாரணம் செய்ய எடுப்பதை நியாயப்படுத்த முடியுமா? என்பது கேள்விக்குறியே. (8ம் பக்கம்)

### தமது மனசாட்சியை சிலர் அடகு வைத்து விட்டனர்.

தமது மனச்சாட்சியை அடகு வைத்துவிட்டு சிலர் இன்று பேரினவாத கட்சிகளிலும், சுயேட்சைக்குழுக்களிலும் தமிழர் என்று சொல்லிக் கொண்டு போட்டியிடுகிறார்கள் என்றால் எமது இனத்துக்கு எதிரான துரோக வரலாறுகளில் இதுவும் ஒன்றாகத்தான் இருக்கும் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் திருக்கோணமலை மாவட்ட வேட்பாளர் பரமலிங்கம் நித்தியானந்தம் (நித்தி மாஸ்டர்) குறிப்பிட்டுள்ளார். (8ம் பக்கம்)

### கடலில் எச்சரிக்கை பலகை போடுங்கள் (8ம் பக்கம்)

மூதூர் கொட்டியாரக்குடா முனை கடல் பரப்பில் நீராடுவதற்கு தடையாக "நீராடுதல் அபாயம்", என்ற எச்சரிக்கை பலகையொன்றை போடுமாறு மூதூர் திடீர் மரண விசாரணை அதிகாரி முகம்மது யூசுப்லாபீர் சம்பத்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். கடந்த மாதம் 26ம் திகதி

### கிண்ணியாவின் வரவேற்புக் கோபுரக் கட்டடப் பணிகள் இடைநிறுத்தம்.



கிண்ணியா நகருக்குள் திருமலையிலிருந்து உள்நுழையும் வாயிலில் கட்டப்பட்டு வந்த கோபுரக் கட்டுமாணத்தை இடைநிறுத்துமாறு நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் கட்டளையிட்டுள்ளார். கிண்ணியா நகரசபைக்கும் பிரதேசசபைக்கும் அனுப்பப்பட்டுள்ள அவரது கடிதத்தலைப்பு இத் தடையுத்தரவை அமுலாக்கியுள்ளது தெரியவந்துள்ளது. (8ம் பக்கம்)

## கிழக்கில் எழுச்சியடையும் தமிழ் பேசும் சமூகங்கள்



ரம்zான் முகமது அன்வர் - இலங்கை முஸ்லிம் காங்கிரசின் திருமலைமாவட்டப் பிரதமவேட்பாளர்

கிழக்கின் தமிழ் பேசும் மக்கள் இணைவதன் ஊடாகவே தமது உரிமைகளை வென்றெடுக்கலாம் எனஇலங்கை முஸ்லிம் காங்கிரசின் திருமலை மாவட்டப் பிரதம வேட்பாளர் மலைமுரசிற்கு வழங்கிய பிரத்தியேகச் செவ்வியில் குறிப்பிட்டார்.

தனித்துப் போட்டியிடுவதால் மரச் சின்னம் மக்களின் மனதில் பதிக்கப்பட்டுவிடும் எனவும் அவர் தெரிவித்தார். முன்னரெல்லாம் வேறு கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டதால் எமது தனித்துவத்தைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதுடன் கடந்த கிழக்கு மாகாணசபையில் தாம் பாரபட்சமான அணுகுமுறைகளுக்கு உள்ளாகியிருந்ததாகவும் அவர்தெரிவித்தார்.

அவரது செவ்வியின் முழுவிபரம் 06ம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

### பதினெட்டு வயது முதல் தாத்தா பாட்டி வரை... (8ம் பக்கம்)

காலத்தின் தேவை அறிந்த கைகோர்ப்பு என்ற தலைப்பில் பத்மநாபாவின் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சி வெளியிட்டுள்ள வேண்டு கோளில் கிழக்கு மாகாணசபைத்தேர்தலில் தமிழர்கள் அனைவரும் ஒரே அணியின் கீழ் என்பதை இலங்கை அரசம் சர்வதேச சமூகமும் புரிந்து கொள்வதற்காக 18 வயது முதல் தாத்தா, பாட்டிவரை தங்கள் வாக்குகளை தவறாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீடு சின்னத்திற்கு வாக்குகளை அளிக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளது.

பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப் அணியினால் இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கை வருமாறு:- பெரும் பான்மை பேரினவாதத்தின் பிடிக்குள் சிக்கிக் கொண்டுள்ள எம் மக்கள் மீது சர்வதேசத்தின் பார்வை என்றும் இல்லாதவாறு இன்று ஆழமாகப் பதிந்துள்ளது.இவ்வேளையில் நாம் பல்வேறு அணிகளாக பிளவு பட்டு தேர்தலில் போட்டியிட்டு தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடிக்காமல் நாம் அனைவரும் ஒன்று பட்டு ஒரே குடையின் கீழ் நின்று தேர்தலில் போட்டியிட்டு எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக் கூடிய அரசியல் தீர்வு ஒன்றினை பெற்றுக் கொடுக்க வேண்டும். தமிழர்களாகிய நாம் மடந்த காலங்களில் சந்தித்த எத்தனை அரசியல் சறுக்கல்களைப் போல் இல்லாமல் இம் முறை நாம் சிந்தித்துப் பார்க்க

### கிழக்குப் பல்கலைக் கழக திருமலை வளாக மாணவர்கள் தொடர் ஆர்ப்பாட்டம்



கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து தனியான அலகாக திருமலை வளாகத்தை பிரிக்கக் கோரி திருமலை மாவட்ட மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கியுள்ளனர். (8ம் பக்கம்)


**NEW ADMISSION FOR ACADEMIC YEAR 2012-2013**

**JULY - SEPTEMBER 2012**

NEW ADMISSION WILL BE ISSUED FOR
➡ PLAY GROUP
➡ LKG ➡ UKG ➡ STEP 1 ➡ GRADE 01 - 08

OUR PAST ACTIVITIES



GREENWICH INTERNATIONAL SCHOOL
#23,GREEN ROAD,TRINCOMALEE. T.P-026 2226818,077 4123672 E-MAIL :- GISTRINCOMALEE@GMAIL.COM
GREENWICH EDUCATION ACADEMY (PVT) LTD. (REG NO-PV 76073)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு

## வணக்கம்

வருந்தத்தக்க விடயமாக கடந்த இதழில் பல தமிழ்ப் பிழைகளை வாசகர்கள் சுட்டிக் காட்டியிருந்தார்கள். வாசகரிற் பெரும்பாலானோர் அதை பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொண்டு அடுத்த இதழுக்காக அமைதியாக இருக்கின்றார்கள். எனக்குப் புரிகின்றது, வலுப்பட வேண்டிய எனது பொறுப்பு ஒவ்வொரு ஞாயிறு காலையும் அதிகரித்துச் செலகின்றது என்பது. எனினும் நடந்த தமிழ்ப் பிழைகளை பொறுத்தருளும் படிமிகப் பணிவுடன் வேண்டுகின்றேன்.

நாட்கள் நகரநகர அரசியல் அரங்கில் மாற்றங்கள் நடந்து கொண்டேயிருக்கின்றன. எப்போதும் போலவே வாக்குறுதிகளை அள்ளி வீசும் நடிகர்களிடமிருந்து சரியான மனிதர்களைத் தேடிப் பிடிக்கும் பணியும் அவர்களுக்கே வாக்கைச் சரியாக இடும் பணியும் எமக்குக் காத்திருக் கின்றது. நீண்டு செல்லும் வாக்காளர் மற்றும் கட்சிப் பட்டியலுக்குள் சரியானவரைத் தேடி முக்குளித்தலுக்குத் தயாராகுங்கள். தவறியும் உங்கள் வாக்கைச் செல்லு படியற்றதாக்கிவிடாதீர்கள். வாக்களித்தலும், வாக்கைச் சரியாக அளித்தலும் எம்மைப் பெறுமதி யுடையவராக்கும் செயற்பாடு என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

கடந்த இதழிற் பணித்தது போலவே இவ்விதழ் திருமலைச் செய்திகளைப் பெரும்பாலும் உள்ளடக்கி யுள்ளது மகிழ்ச்சியாய் உள்ளது. எனினும் எனது கருத்தெல்லாம் இன்னமும் வெளிப்படாத எத்தனை செய்திகள் இத் துறைமுகப் பட்டணத்தில் மூழ்கிக் கிடக்கின்றன என்பதே. பத்திரிகையாளனாகுதல் என்பது தற்கொலைக்குச் சமம் எனக் கருதும் எமது பிரதேசத்தில் எத்தனை பேர் உண்மைகளை எமக்காக எழுத... மன்னிக்கவும் ...உங்களுக்காக எழுத முன்வரப் போகின்றீர்கள்?

-ஆசிரியர்-

159A, 2nd Floor, Sea view Road,
Trincomalee.
malaimurasu@hotmail.com
0754252042

**மலைமுரசுக்கு நிருபர்கள் தேவை**

மலைமுரசு பத்திரிகைக்கு பிரதேச பத்திரிகை நிருபர்கள் தேவை. கொடுப்பனவுகள் வழங்கப்படும் விருப்புடையவர்கள் உங்கள் சுய விபரக் கோவையை கீழ்காணும் மின்னஞ்சல் முகவரிக்கோ, தபால் முகவரிக்கோ அனுப்பி வைக்கவும்.

## தேசியப் பத்திரிகைகளின் விலைகள் உயர்வு

உலகசந்தையில் பத்திரிகைகளின் விலை அதிகரிப்பானது இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியாலும், எழுந்துள்ள நிதி நெருக்கடியாலும் தேசியப் பத்திரிகைகளை அவதிக்குள்ளாக்கியுள்ளது. இதனால் தேசியபத்திரிகைகளில் சில தமது விலையினை 10 ரூபாவினால் கடந்தவாரத்தில் அதிகரித்துள்ளன.

## பயிற்சிகளை முடித்து வெளியேறினர் படையினர்





திருகோணமலை சீனக்குடா விமானப்படைத் தளத்தில் பயிற்சிளை முடித்துக் கொண்ட 463 படை வீரர்கள் சனிக்கிழமை 04.08.2012 வெளியேறினர். 83 விமானிகளும். 383 படையினரும் இவ்வாறு பயிற்சிகளை நிறைவு செய்திருந்தனர். பாதுகாப்பு அமைச்சின் செயலளர் கோத்தபாயா ராஜபக்ஷ அதிதியாகக் கலந்து கொண்டு பயிற்சிகளை நிறைவு செய்த படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட தம் திறமைகாட்டிய வீரர்களுக்கு பரிசுகளையும் வழங்கி வைத்தார்.

## உப்புவெளியில் வடிகால் அமைப்பு

உள்ராட்சி மன்றங்களின் சேவைகளைமேம்படுத்தும் திட்டத்தின் கீழ் உப்புவெளி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட புளியங்குளத்தில் 2.7 மில்லியன் ரூபாய் செலவில் வடிகால் ஒன்று அமைக்கப்பட உள்ளது. 313 மீற்றர் நீளம் கொண்டதாக இவ்வடிகால் 3 அடி அகலத்தில் அமைக்கப்பட உள்ளது. இத்திட்டத்திற்கான நிதியினை பிரதேச சபைக்கு ஜேர்மன் தொழிநுட்ப நிறுவனம் வழங்கி உள்ளது. பீப்பிள் இன் நீட் நிறுவனம் இதனை நடைமுறைப் படுத்துகின்றது.



இத்திட்டத்திற்கான அடிக்கல் கடந்த புதன்கிழமை 01.08.2012 நாட்டப்பட்டது. பிரதேச சபையின் தலைவர் என்.விஜேந்திரன் உப தலைவர், மற்றும் உறுப்பினர்கள் இதில் கலந்து சிறப்பித்தனர்.



மழை காலத்தில் இப்பிரதேசத்தில் வெள்ள நீர் தேங்குவதால் பிரதேச மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகி இருந்தனர். இத்திட்டத்தின் மூலம் புளியங்குளம் கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 1214 குடும்பங்களைச் சேர்ந்த 4737 பேர் நேரடியாகவும். 841 குடும்பங்களைச் சேர்ந்து 3214 பேர் மறைமுகமாகவும் நன்மை அடைய உள்ளனர்.

நித்தியபுரியில் இருந்து முதியோர் இல்லம் வரையான 83 மீற்றரிலும், முதியோர் இல்லத்தில் இருந்து முதலாவது ஒழுங்கை வரையான 230 மீற்றர் நீளத்திலும் இவ்வடிகால் அமையப் பெறும்.

## ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் திருக்கோணமலைச் செயற்கூட்டம்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் திருக்கோணமலை மாவட்ட தேர்தல் தொகுதியின் கூட்டம் கடந்த சனிக்கிழமை திருக்கோணமலை நகரசபை மண்டபத்தில் நடந்தேறியது.

அமைச்சர் இராசிதசேனாரத்தின தலைமையில் பிரதி அமைச்சர்களான புஞ்சிநிலமே மற்றும் குணவர்த்தன ஆகியோரின் பங்களிப்புடன் நிகழ்ந்தது. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை கிழக்கு மகாணசபைத் தேர்தலில் வெற்றியடையச் செய்வதற்கான வேண்டுகோள்களை விடுத்த பேச்சாளர்கள் அதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் பேச்சுக்களை நிகழ்த்தினர்.

## திருமலை இந்துக் கல்லூரி வெற்றி

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கட் சங்கம் நாடு முழுவதும் நடாத்தும் 15 வயதுக்கும் 17 வயதிற்கும் இடைப்பட்ட மாணவர்களுக்கான துடுப்பாட்டப் போட்டியில் இ.கி.ச. கோணேஸ்வரா இந்துக்கல்லூரி கிண்ணியா அல் அக்ஸா கல்லூரியை 79 ஓட்டங்களால் வெற்றி கொண்டுள்ளது.

07.08.2012ல் கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமான இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கோணேஸ்வரா இந்துக்கல்லூரி முதலில் துடுப்பாடி 169 ஓட்டங்களைப் பெற்றுசகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக 45 ஓட்டங்களை தர்சிதன் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் ஈஜாத் 23 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளைக் கொய்தார்.

பின்னர் துடுப்பாடிய கிண்ணியா அல் அக்ஸா கல்லூரி 90 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து தோல்வியடைந்தது. கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் அணித்தலைவர் 12 ஓட்டங்களுக் 04 இலக்குகளை வீழ்த்தியது. இப் போட்டியின் வெற்றியைக் கோணேஸ்வரா இந்துக்கல்லூரிக்கு மாற்றியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ வாணி வித்தியாலயத்தில் புதிய கட்டடம்

அரசாங்கத்தின் 5000 பாடசாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பாடசாலைகளின் பௌதீக தேவைகளை நிறைவு செய்யம் முகமாக புதிய கட்டங்கள் அமைக்கப்பட உள்ளன.



திருக்கோணமலை கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாலையூற்று ஸ்ரீ வாணி வித்தியாலயத்தில் இத்திட்டத்திற்கு அமைய புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட உள்ளது. இதற்கான அடிக்கல் வெள்ளிக்கிழமை 03.08.2012 காலை நட்டு வைக்கப்பட்டது. கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஏ.புஸ்பகுமார, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வா, கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் ஏ.எம.ஈ போல் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கற்களை நட்டு வைத்தனர்.



படத்தில் அரசாங்க அதிபர் ரஞ்சித் சில்வா அடிக்கல்லினை நட்டு வைக்கின்றார்.

## அறிஞர்களுக்கு கௌரவ பட்டம்

திருக்கோணமலை புனித மரியாள் பேராலயத்தில் வைத்து ஐந்து துறைசார் அறிஞர்களுக்கு கௌரவ பட்டம் வழங்கி வைக்கப்பட்டது. திங்கட்கிழமை 06.08.2012 மாலை 6.00 மணிக்கு இந் நிகழவு நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் என்பனவற்றுடன் இணைக்கப்பட்ட இந்திய பல்கலைக்கழகமான அக்கடமி ஒப் யுனிவேர்சல் குளோபல் பீஸ் இதனை வழங்கி வைத்தது.



பல்கலைக்கழகத்தின் தலைவர் அதிவந்தனைக்குரிய கலாநிதி மதுகிசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி சசிமகேந்திரா பட்டங்களை வழங்கி வைத்தார். புனித மரியாள் பேராலய பங்குத் தந்தை அருட்ணி ஜோர்ச் திசாநாயக்காவுக்கு கலாநிதி பட்டமும் புலவர் ஏ.டபிள்யு அரியநாயகம் அவர்களுக்கு கௌரவ பட்டமும் சுமுறு துலக்சான் சப்றாது என்.ஜே.ஆர் கூரே ஆகியோருக்கு இறையியல் பட்டமும் வழங்கி வைக்கப்பட்டது.

# சிறுவர்கள் - நாட்டின் எதிர்கால ????

பாகம் 1



அநாதியான காலந்தொட்டு இலங்கை மேம்பட்ட சக்தியுடனான அமைப்பாகவும், நல்ல விழுமியங்களைக் கொண்ட சமூகத்தை உள்ளடக்கியதாகவும் இருந்தது. எப்படியிருந்த போதிலும் ஆக்கிரமிக்கப்பட்ட வெளிநாட்டு சக்திகள் மற்றும் பல்வேறு விடயங்களினால் ஏற்பட்ட விழுமியங்களின் வீழ்ச்சியினுள் இன்றுவரை சிறுவர்களின் நல்வாழ்வு சிக்கி உழலும் பரிதாப நிலையை காணமுடிகிறது. இது பெற்றோர்கள் உட்பட சகல சமூகத்தினர்க்கும் சவாலாகவுள்ளது.

தற்போது இலங்கை உயர்நீதிமன்றத்தில் 4000க்கும் மேற்பட்ட சிறுவருக்கெதிராக புரியப்படும் குற்றங்கள் தொடர்பான வழக்குகள் நடைபெற்ற வண்ணமே உள்ளன.

மாதினி சட்டத்துறை, கொழும்பு பல்கலைக்கழகம்

**சிறுவர்கள் என்றால் யார்?**

சிறுவர் உரிமை பற்றிய சமவாயத்தில் 18 வயதுக்குட்பட்ட அனைத்து மனிதப் பிறவிகளும் சிறுவர்கள் என வரையறுக்கப் பட்டுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரை தண்டனைச் சட்டக்கோவை, பராமரிப்புச்சட்டம், தேசியசிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச்சட்டம் என்பன 18 வயதுக் குட்பட்டோரையும் தொழிற்சாலைக் கட்டளைச்சட்டம், சிறுவர் இளம்பராயத்தவர் கட்டளைச்சட்டம் முதலிய சில சட்டங்கள் 14 வயதுக்குட்பட்டோரையும் சிறுவர்கள் என குறிப்பிடுகின்றன. எனினும் நாம் பொதுவாக 18 வயதுக்குட்பட்டோரை சிறுவர்களெனக் கருதலாம். இவர்களுக்கு எதிரான குற்றங்கள்


1. பாலியல் துஸ்பிரயோகம்
2. சிறுவர்களைக் கொடுமைப்படுத்துதல்
3. காவிச் செல்லுதல்
4. வேலைக்குஅமர்த்துதல்

ஆகியவற்றைக் கருதும். இக்கட்டுரை பாலியல் துஸ்பிரயோகம் தொடர்பான விளக்கத்தை வாசகர்களுக்கு வழங்குவதாக அமையவுள்ளது.

**பாலியல் துஸ்பிரயோகம் (SEXUAL ABUSE)**

சிறுவர்களைபாலியல் தேவைகளுக்காக கீழ்த்தரமான முறையில் பயன்படுத்துவதையே இது குறிக்கும். நிச்சயமாக பாலியல் துஸ்பிரயோகம் சிறுவர்களின் உடல் தொடர்புடையதாக இருக்க வேண்டியகட்டாயமில்லை. கேவலமானவிதத்தில் அவர்களுக்கு உடற்பகுதிகளைக் காட்டுதல், தொலைபேசியில் அழைத்து ஆபாசமாகப் பேசுதல், ஆபாசப்படங்களைப் பார்க்கத் தூண்டுதல் என்பனவாகவும் அமையலாம். இதில் கவலைக்குரிய விடயம் யாதெனில் இவை நெருக்கமான உறவினர்களாலேயே புரியப்படுவதாகும். நீதி அமைச்சு தகவலின் படி சராசரியாக 1126 வழக்குகளில் 89 குற்றங்கள் தந்தையாலும் 14 குற்றங்கள் வளர்ப்புத் தந்தையாலும் 05 பாட்டனாலும் புரியப்படுகின்றன. துஸ்பிரயோகத்துக்குள்ளாகும் சிறுவர்கள் சமூகத்தில் வித்தியாசமான கண்ணோட்டத்தில் நோக்கப்படுவதால் அவர்கள் அதைவெளியில் சொல்லத் தயங்குகின்றார்கள் இதனால் அதிகளவு குற்றங்கள் வெளிச்சத்துக்கு கொண்டு வரப்படாமல் மறைக்கப்படுகின்றன.

இனி பாலியல் தொடர்பாகப் புரியப்படும் குற்றங்கள் தொடர்பில் ஆராய்வோம்.




**பாலியல் சுரண்டல்**

வெறுமனே ஒருவரை பாலியல் நோக்கத்துக்காக பயன்படுத்துவது மட்டுமே பாலியல் சுரண்டல் அல்ல. சிறுவரை பாலியல் துஸ்பிரயோகத்துக்கு உட்படுத்துவதற்காக அல்லது ஆபாசமான காட்சிகளில் பங்கேற்பதற்காக ஏதேனுமொரு இடத்தில் அனுமதி ப்பதும் குற்றமே. உதாரணமாக ஒரு தனியார் கல்வி நிலையத்தில் ஆசிரியர் மாணவர் களை தகாத முறையில் தொடுகிறார் என அறிந்திருந்தும் அக் கல்வி நிலைய நிர்வாகி அனுமதி அளிப்பாரெனின் அவரும் தண்டனைக் குரியவரே. மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்காக ஒருவரை வாடிக்கையாளராக இருக்கத் தூண்டுவதும் தவறாகும்.



பாலியல் சுரண்டலில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியதொன்று இத்தகைய நடவடிக்கை களுக்காக சிறுவர்களுக்கும் அல்லது சிறுவர்களின் உறவினர்க்கும் இடையான உறவை சாதகமாகப் பயன்படுத்துவதாகும். பெற்றோராலும் உறவினர்களாலும் காப்பக உரிமை யாளர்களாலும் ஆசிரியர்களாலும் அதிபர்களாலும் சிறுவர்கள் சுரண்டலுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இதே போன்றதொரு சம்பவம் 2010 மேமாதம் திருகோணமலை உப்புவெளியிலுள்ள சிறுவர் இல்லத்திலும் இடம்பெற்றுள்ளது. 2010 நவம்பர் மாதம் ஹபரடுவ எனுமிடத்தில் ஒரு புத்தபிக்குவால் விகாரையில் கல்வி கற்கச் சென்ற சிறுவன் ஒருவன் பாலியல் துஸ்பிரயோகஞ் செய்யப் பட்டுள்ளான்..

பாடசாலைகளில் ஆசிரியர்கள் பாலியல் வல்லுறவுக்காக அத்தகைய செயலொன்றைப் புரிய அடிப்பது அல்லது புள்ளிகளைக் குறைப்பதாக பயமுறுத்துவது வழக்கமாக இடம் பெறுவதைக் காணலாம். சிறுவரைத் தூண்டுவதற்காக அவர்களுக்கு அல்லது அவர்களது பெற்றோருக்கு பணம், பொருட்கள் வேறுவகையான நலன்களை வழங்குவதும் பாலியல் சுரண்டலாகும். தந்தை மாருக்கு மது பானத்தை வழங்கிவிட்டு சிறுமிகளை வல்லுறவுக்கு உட்படுத்தும் சம்பவங்கள் பெருந்தோட்டப் பகுதிகளில் இடம்பெற்று வருகின்றன. அந்த அற்ப மதுபானத்தின் விலையும் சிறுமிகளின் வாழ்க்கையும் ஒரே பெறுமானமா உடையவை என்பதை தந்தைமார் சிந்திக்க தவறுவது மாபெருந் தவறாகும். இதே வேளை அண்மையில் கம்பஹா மாவட்டத்தில் கராஜ் உரிமையாளர் ஒருவர் சிறுமிக்கு மடிக்கணணி (Lap-Top) தருவதாகக் கூறி பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் முறைப்பாடு தெரிவிக்கப் பட்டுள்ளது.

aat SRI LANKA

2013 ஜனவரி பரீட்சைகளுக்கான மாணவர் பதிவுகள் தற்போது ஆரம்பம்

க.பொ.த. (சா/த) பரீசையில் 06 பாடங்களில் சித்தியெய்திய மற்றும் தற்பொழுது க.பொ.த (உ/த) கற்றுக் கொண்டிருக்கும் எந்தவொரு மாணவரும் பதிவுசெய்து கொள்ள முடியும்.

AAT பரீட்சைகள்
- சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பரீட்சைகள் நடைபெறும்.
- ஒவ்வொரு பாடமாகவும் பரீட்சைகளுக்குத் தோற்றலாம்
- மூன்று மட்டங்களைக் கொண்டது. ஆரம்பநிலை(Foundation) மற்றும் இடைநிலை (intermediate) பாடங்கள் எல்லாவற்றிற்கும் ஒரே தடவையில் விண்ணப்பித்து தோற்ற முடியும்
- பரீட்சை நிலையங்கள் கொழும்பு, கண்டி, மாத்தறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, குருநாகல், கம்பஹா, அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் அம்பாறை ஆகிய இடங்களில் அமையும்.

AAT இறுதிமட்ட பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பெறக்கூடிய விலக்களிப்புக்கள்
- இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் (LCASL) CAB-I பரீட்சையிலிருந்து பூரண விலக்களிப்பு.
- CIMA(UK) மற்றும் ICMA(SL) நிறுவகங்களின் ஆரம்பநிலைப் பரீட்சையிலிருந்து பூரண விலக்களிப்பு
- இலங்கை மற்றும் சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் வர்த்தகம், முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், சட்டம் மற்றும் கணினித்துறைகளில் பட்டங்களைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள்.

விண்ணப்பிக்கும் முறை
பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கிய மாணவர் வழிகாட்டியினை திங்கள் முதல் சனி வரை காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரையான காலப்பகுதியில் வேல் வர்த்தகக் கல்லூரியில் பெற்றுக்கொள்ளுங்கள்




aat SRI LANKA VEAL BUSINESS COLLEGE
VISIT US : 159 A, Sea View Road, Trincomalee. CALL US : 026 222 7622 / 0777 555 738

கிழக்கு மாகாணசபை தேர்தல் - 2012
திருக்கோணமலை மாவட்டம்

தமிழ் இன அழிப்பைச் செய்தோரைத் தோற்கடிப்போம்!
தமிழ் இனத்துக்கு நீதி கிடைக்க வாக்களிப்போம்!



பிரபல பௌதிகவியல் ஆசிரியர்
பரமலிங்கம் நித்தியானந்தம்
(நித்தி மாஸ்டர்)

X 9

இது கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வ. அ. இராசரத்தினத்தின் இலக்கிய நினைவுகள்

1995ம் ஆண்டு பிரதேச சாகித்திய விழா மத்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் திருக்கோணமலை புனித சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. அப்போது மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளராக திரு.சுந்தரம் டிவகலாலா கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

தமிழகத்திலிருந்து விமர்சகர் வல்லிக் கண்ணன், நாவலாசிரியர் பொன்னீலன், தாமரை ஆசிரியர் சி.மகேந்திரன் ஆகியோர் விழாவுக்கு வந்திருந்தனர்.

அன்றைய தினம் திரு.வ.அ. இராசரத்தினம் அவர்கள் விழாவில் கௌரவிக்கப் படவிருந்தார். திருக்கோணமலையின் நாவல், சிறுகதை, கவிதை எனும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரைகள் படிக்கப் படவிருந்தன. சிறுகதைகள் பற்றிய ஆய்வை நிகழ்த்தநான் பணிக்கப் பட்டிருந்தேன். பேராசிரியர் திரு.சி.தில்லைநாதன் ஆய்வுகளைத் தலைமை தாங்கி நடாத்திக் கொண்டிருந்தார்.

மேடையில் வ.அ.இராசரத்தினத்துடன் தமிழக அதிதிகள் அமர்ந்திருந்தனர். பார்வையாளர் பகுதியில் திருமலையின் முக்கிய எழுத்தாளர்களும் கவிஞர்களும் அமர்ந்திருந்தனர்.

**நந்தினி சேவியர்**

நான் கட்டுரையை வாசிக்கத் தொடங்கினேன். விலாவாரியான தகவல்களுடன் கொஞ்சம் கொஞ்சமாக காரம் ஏறத் தொடங்கியது. ஒவ்வொரு வராக தனித்தனியே படைப்புகளையும் படைப்பாளிகளையும் விமர்சிக்கத் தொடங்கினேன். நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதிய ந.பாலேஸ்வரியின் ஒருகதை கூட என் மனதைத் தொடவில்லை என்பதைக் குறிப்பிட்டேன். வ.அ.இராசரத்தினம் அவர்களின் 'தோணி'எனும் கதை ஒன்றைத் தவிரஅவரதுசிறுகதைகள் எதுவும் என் மனதைத் தொடவில்லை, அவர் இன்னும் 1950 களிலேயே நிற்கிறார். சிறுகதை பல எல்லைகளைத் தாண்டி இப்போது எங்கோ வந்துவிட்டது. 'நிவேதனம்' எனும் கோணைத் தென்றல் வெளியிட்ட தொகுப்பில் உள்ளரிசிப் பிரஞ்ஞன், (ரமணீகரன் - சித்தார்த்த சேகுவேரா) தேஸ்விலோமன் (தில்லைக் குமரன்) ஆகியோருடைய கதைகளைப் பாருங்கள். அவர்களது எழுத்துக்களால் நான் கவரப் பட்டுள்ளேன் என்றேன்.

இவ்வளவுக்கும் வ.அ.மேடையிலும், பார்வையாளர் வரிசையில் ந.பாலேஸ்வரியும் அமரந்திருந்தனர்.

இக் கட்டுரையின் ஒரு இடத்தில் திருக்கோணமலையைச் சாராத எழுத்தாளர்களான டானியல், செங்கை ஆழியான் ஆகியோரின் கதைகளைக் குறிப்பிட்டு கிண்ணியா உதவிஅரசாங்க அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த செங்கை ஆழியான் (க.குணராசா) ஜொகாரா என்னும் சிறுகதையை எழுதியமையால் கிண்ணியாவிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டதைக் குறிப்பிட்டிருந்தேன். யார் மீதும் காழ்ப்புணர்ச்சி கொண்டு எனது விமர்சனத்தை நான் செய்வதில்லை. இளம் எழுத்தாளர்கள் நன்றாக வரவேண்டும், வளரவேண்டும் எனும் ஆதங்கம் எனக்கு உண்டு.

திரு.வ.அ.இராசரத்தினத்திடம் ஒரு காரம் இருப்பதை நான் ஆரம்பகாலத்திலிருந்தே அவதானித்துவந்திருக்கிறேன். அவருடைய 'இலக்கிய நினைவுகள்' நூல் வந்தபுதிதில் "ஏன் சேர் திருக்கோணமலை எழுத்தாளர்கள் ஒருவரையும் இந்த நூலில் குறிப்பிடவில்லை" என ஒருவர் வினவ" திருக்கோணமலையில் எந்த ஓர் எழுத்தாளன் இருக்கிறான்?" என காட்டமாகக் கேட்டதை நான் அறிந்துள்ளேன்.

நண்பர் கனகசபை தேவகடாட்சம் தினமுரசில் அசுர வேகத்தில் கதை எழுதிக்கொண்டிருந்த காலம் (அது கதைகளா என்பது வேறுவிடயம்) வ.அ.விடம் "சேர் என்னுடைய கதைகளைப் படித்திருக்கிறீர்களா?" எனக் கேட்டிருக்கிறார். "நீங்களும் இப்பபேனை பிடிக்கத் தொடங்கிட்டீங்கள்" என்று அவரை வ.அ மட்டந்தட்டியிருக்கிறார். வ.அ அவருடைய இலக்கிய நினைவுகள் பதிப்பைச் (அன்பர் நிதியம் வெளியீடு) செவ்வை பார்த்தவன் நான். அவரது "பொச்சங்கள்" நூலை வடிவமைத்து, அட்டைப்படம் தயாரித்து பதிப்பகத் திணைக்கள த்தினூடாக வெளிவரச் செய்ததில் நானும் பெருமளவு பங்காற்றியுள்ளதை இவ்விடத்தில் பதிவு செய்ய விளைகிறேன்.

எனக்கும் வ.அ.வுக்குமான உறவு பிறிதொரு வகையானது.

1995 நத்தார் தினம். அதிகாலை வ.அ.இராசரத்தினம் எனது வீட்டுக்குகையில் ஒரு............ வந்திருந்தார். "இம்முறைநத்தார் தினத்தை ஒரு எழுத்தாளனுடன் கொண்டாட இருக்கிறேன். அதுதான் உம்மிடம் வந்திருக்கிறேன்" என்றார். உண்மையில் மகிழ்ச்சியாக இருந்தது.வ.அ. என்னை எழுத்தாளனாக ஏற்றுக்கொண்டிருப்பது பெருமையாகவும் இருந்தது.

இது மாத்திரமல்ல வ.அ.வோடு பல மேடைகளில் நான் முரண்பட்டுள்ளேன் அது தனிக்கதை. ஒருமுறைவ.அ. வுடன் பேசிகொண்டிருந்த போது "மௌனி" பற்றிக் கதைக்கக்கிடைத்தது. என்னால் மௌனியை நிதானமாகப் படிக்க முடியவில்லை. அவரை, அவரது கதைகளை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. 1967ல் பிரேமிளின் முன்னுரையுடன் வெளிவந்த மௌனியின் 'அழியாச்சுடர்' சிறுகதைத் தொகுதியின் விமர்சனக் கூட்டத்தில் மேடையில் நான் "மௌனி"யாக நின்றதையும் தலைவர் என்னைப் பேசவற்புறுத்திய போது இக்கதைகளைப் பற்றிப் பேச என்னால் முடியவில்லை இவ்விடத்தில் நான் "மௌனியே" என சபையை நான் கலகலப் பாக்கியதைக் கூறினேன். வ.அ. இராசரத்தினம் சிரித்துக் கொண்டே எனக்கும் "மௌனி"யை இன்றுவரைபுரியவில்லைஎன்றார்.

இந்தச்சம்பவங்களுக்குப் பிறகே திருக்கோணமலைச் சாகித்திய விழாவில் வ.அ பற்றி அவரை மேடையில் வைத்துக் கொண்டே நாகரீகமாக கேள்வி எழுப்பினேன்.

பின்னர் பதிலுரையாற்ற இறுதியில் வந்த வ.அ. "நண்பர் நந்தினி சேவியரின் குற்றச்சாட்டை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். கோணாங்கி, தமிழவன், ராமகிருஸ்ணனை நான் படித்துக் கொண்டிருக்கிறேன். தமிழக, கேரளப் படைப்புகளை வாசிக்கிறேன். வருகிற மாதம் தமிழகம் செல்கிறேன். ஒரு மாதச்சுற்றுலா. பல எழுத்தாளர்களைச் சந்தித்து வருவேன் நந்தினி சேவியர் விரும்புவது போல் சிறுகதைகளைப் படைப்பேன்" என ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். தமிழகத்தில் மித்ர வெளியீடாக ஒரு 'காவியம் நிறைவு பெறுகிறது' எனும் அவரது சிறுகதைகள் பல அடங்கிய தொகுப்பு வெளியீட்டுக்காக அவர் அடுத்த மாதம் தமிழகம் சென்றுவந்தார்.

என்ன ஆச்சரியம்! திரும்பி வந்த பின் அவரது எழுத்தில் எந்தவித மாற்றமுமிருக்கவில்லை. அடுத்த வருடம் அவர் வெளியிட்ட 'கொட்டியாரக்கதைகள்' நூல் வெளியீட்டுக்கு ஒரு பேச்சாளனாக நான் அழைக்கப் பட்டிருந்தேன். திகதி குறிக்கப்பட்டு இரத்துச் செய்யப்பட்ட நிகழ்வு குறித்து அவர் தந்தி மூலம் எனக்கு அறிவித்திருந்தார். பின்னர் மூதூர் அந்தோனியார் வித்தியாலயத்தில் நடைபெற்ற அவ்விழாவில் லோஞ் ஓடாதபடியால் கிண்ணியா சென்று சிறிய வள்ளத்தில் மூதூர் சென்ற நான் அவரது எழுத்தில் எந்தவித மாற்றமுமிருக்கவில்லை என்ற விடயத்தைச் சுட்டிக்காட்ட மறக்கவில்லை.

அந்த நினைவுகளுடன் வ.அவின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளநான், சுவி, ஜெயமுருகன், எதுவரை எம். பௌசி, ஆகியோர் லோஞ்சில் சென்ற நினைவுகளும் என்னுள் பசுமையாக நிறைந்து கிடக்கிறது.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள்

1) ஐந்து ஞாயிற்றுக் கிழமைகள் உள்ள ஓர் ஆவணிமாதத்தில் அந்த ஞாயிற்றுக் கிழமைகளின் தேதிகளின் மொத்தத்திற்கு இடுக்கத்தக்க உயர்ந்த பெறுமானம்?
   I. 80    I. 80    I. 75




- 2,3,4ம் கேள்விகளுக்கு கீழ்வரும் வரிப்படத்தைப் பார்த்து விடையளிக்கவும்.ஏடு பிரதேசத்திலுள்ள வீட்டில் வளர்க்கும் பிராணிகளின் எண்ணிக்கை இவ் வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளது.

2) வீட்டில் வளர்க்கப்படும்நான்கு கால் பிராணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?
   1. 470    2. 570    3. 670

3) ஆகக்குறைவாகவும் ஆகக் கூடுதலாகவும் வளர்க்கப்படும் பிராணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?
   1. 151    2. 380    3. 519

4) மாடுகளை விட குறைவாக வளர்க்கப்படும் பிராணி எது?
   1. பூனை    2. ஆடு    3. கோழி

5) ஒரு பேருந்து வண்டியின் கதிமானி மணித்தியாலத்திற்கு 70கிலோமீற்றர் எனக் காட்டியது. இதன் பயணத்திசைக்கு எதிர்திசையில் மணித்தியாலயத்திற்கு 20 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசுகின்றது எனில் பேருந்து செல்லும் உண்மையான வேகம் யாது?
   1. 90 கி.மீற்றர்    2. 50 கி.மீற்றர்    3. 70 கி.மீற்றர்.

6) மரமுந்திரி இலையின் வடிவத்தில் ஒத்த இலை அல்லாதது?
   1. பலா    2. வெண்டி    3. ஆல்இலை

7) ஆவியுயிர்ப்பு நடைபெறும் காலம் எது?
   1. பகல்வேளை    2. இரவுவேளை    3. நல்லிரவு வேளை

8) பின்வரும் பூக்களின் ஓர் இதழ் பூ எது?
   1. பொப்பிமலர்    2. அந்தூரியம்    3. மல்லிகை

9) தேனைக் கொண்டிராத பூ எது?
   1. கனகாம்பரம் பூ    2. எக்சோரா    3. கள்ளிபூ

10) நள்ளிரவில் மலரும் பூ எது?
   1. நடுநிசிப்பூ    2. தாமரை    3. வாழைப்பூ

11) குரங்கின் பெண்பாலைக் குறிப்பது?
   1. மந்தி    2. கடுவன்    3. நாகு

12) "பேசினார்" என்பதன் நிகழ்காலத்தைக் குறிப்பது?
   1. பேசுகின்றார்    2. பேசுதல்    3. பேசுவார்

13) "கறுப்புப் பூனை கொழுத்த எலியை தின்றது" என்பதில் உள்ள எழுவாய் அடைமொழி எது?
   1. கொழுத்த    2. கறுப்பு    3. பூனை

14) "எலும்பும் தோலும்" என்பதன் கருத்து?
   1. மிகவும் மெலிந்தது    2. மிகவும் கறுத்து
   3. மிகவும் பருமனாக

15) நீரோடை யொன்று .......... என பாய்ந்தோடியது?
   1. குடுகுடு    2. சல சல    3. குபீர் குபீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகளுக்குள் வழிகண்ட பிரியதர்ஷினி



கோணமலை தன்னகத்தே எத்தனையோ சாதனையர்களை வைத்திருக்கிறது. மலைகளின் உயரமோ அலைகளின் சத்தமோ எதுவென்று தெரியவில்லை. அவர்களின் அறிமுகத்தின் சமூக பிரவேசத்தின் தன்மையை நெடுங்காலமாகவே மறைத்துவருவது இருந்தும் மலை முரசு இயற்கை வினோதங்களை தாண்டி எம்மவர்களை அறிமுகம் செய்யும் களப்பணியில் விரைந்திருக்கிறது.

அந்த வகையில் சென்றவாரம் விஜயநாதன் ஆனந்த பிரகாஷை அறிமுகம் செய்த மலைமுரசு இவ்வாரம் திருக்கோணமலையின் பெருமையை நாடறியச் செய்த பல்துறை முனைப்பாளர் மெதடிஸ்த பெண்கள் கல்லூரியை சேர்ந்த மாணவி செல்வி.பிரியதர்ஷினி வின்சன் பீரிஸை அறிமுகம் செய்கிறது.

இயல்பாகவே சிறந்த நாவன்மையும், தமிழ்ப்பற்றும் கொண்ட இவர் நிலாவெளி கோபாலபுரத்தை பிறப்பிடமாக கொண்டவர். தனது ஆரம்பகல்வியை கோபாலபுரம் தமிழ் வித்தியாலயத்தில் பெற்ற இவர் இன்று திருக்கோணமலையை மெதடிஸ்த கல்லூரியில் கல்வி பயிலுகின்றார். சிறுவயதிலேயே தந்தையை இழந்து தாயின் பாசப்பிணைப்பில் தன்னை புடம் போட்டுக்கொள்ளும் இவர் தன்னுடைய சாதனைகளுக்கு காரணமானவர்கள் என தனது தாயையும் தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரியின் அதிபர் திருமதி.உ.ஜோதிநாதனையும் அப்பாடசாலையின் தனது ஆரம்பப்பிரிவு ஆசிரியர் N.M. கிதாயத்துல்லா மற்றும் சமூக சேவகி திருமதி.சோன்யா பூரி என்போரை சுட்டுகிறார்.

பேச்சு, விவாதம், கவிதை, சிறுகதை, கட்டுரை, நடனம், நாடகம் மற்றும் அறிவிப்பு என அத்தனை துறைகளிலும் மிளிரும் பிரியதர்ஷினி இதுவரை சுமார் 45க்கும் மேற்பட்ட போட்டிகளில் கலந்துகொண்டு 30க்கு மேற்பட்ட போட்டிகளில் முதலிடம் பெற்றிருக்கிறார். வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் என நீளும் இவரது சாதனைகள்.

- அகில இலங்கை தமிழ்மொழித்தினம் - 2008
  பிரிவு – 4இல் பேச்சுப்போட்டி – முதலாமிடம் (தேசியமட்டம்)
- இளைஞர் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு
  தேசிய இளைஞர் விருது வழங்கல்விழா – 2011
  சிறந்த அறிவிப்பாளர் - முதலாமிடம் (தேசியமட்டம்)
- கம்பன் விழா – 2012
  பேச்சு – முதலாமிடம்
  கவிதை - மூன்றாமிடம் (தேசிய மட்டம்)
- அகில இலங்கை தமிழ் மொழித்தினம் - 2012
  பிரிவு – 5
  கவிதை – முதலாமிடம் (தேசியமட்டம்)
- அகில இலங்கை தமிழ் மொழித்தினம் - 2007, 2012
  மாகாணமட்டம்
  பேச்சு, விவாதம் - இரண்டாம் இடம்
- இதுவரை 5 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் என அமைகிறது இவரது பதக்கப்பட்டியல்.

இளம் கவிஞராக, கலைஞராக மிளிரும் இவரது கவிதைகள் அடங்கிய கவிதைத் தொகுப்பும் விரைவில் வெளிவர காத்திருக்கிறது. இருப்பினும் மலைமுரசின் வாசகர்களுக்காக ப்ரியசகி எனும் புனை பெயரில் எழுதிவரும் இவரது கவிதையிலிருந்து சில கவி வரிகளை தருகிறோம்.

அரை வயிறு கழுவவும்
கஞ்சியில்லை
அடுப்படையில் பூனை
அடகு வைக்கப்படுகிறாள் மனைவி
அவள் அக்குளில் அரிசி தேடுகிறாள்
மாற்றான்
ஏழைப்பெண்ணின் கிழிந்த ரவிக்கைக்குள்
ஏதோ வெளிப்படுகிறதே – தற்கொலை
குண்டுதாரியோ?
ஏழு முறை சல்லடையிடப்படுகிறது
ரவிக்கையற்ற மார்பு
சந்தேகத்தின் பெயரில்

இவரது கலைப்பயணம் இன்னும் தொடர் சிறகை விரிப்பாய் இன்னும் சிறப்பாய் என மலைமுரசு வாழ்த்துகிறது.

-நிலா-

## இது வசந்த காலமல்ல

- தில்லைநாதன் பவித்ரன் -

எங்கள் மரங்கள்
இன்னமும்
பூக்கவும் காய்க்கவும்
தொடங்கவில்லை
எங்களினது வீதிகளில்
பூக்கள் வீழ்ந்திறங்கவுமில்லை
பனித்துளி தாங்கும் இலைகளும்
மகரந்தம் ஊத்தும் தேன்களும்
இல்லாததால்
இது எமக்கு
வசந்தகாலமுமல்ல

இருந்தும்
பறவைகள் வருகின்றன
எங்கிருந்துமல்ல
இங்கிருந்துதான்
ஆனால் எங்கிருந்தோ
பறவைகள் இருப்பதுபற்றி
எமக்குத் தெரியும்
அவை தூதுபோகுமென்றும்
கடந்தெம்மை மீட்குமென்றும்
நாங்கள்தான் அவற்றை
பறவைகளென்றோம்
அவையும் போயின
எமைவிட்டுத் தூரம்
தூதல்ல

எங்கள் காலங்கள்
இலையுதிர் ஆன போது
அவை எமை நோக்கியதில்லை
எங்களுக்கு தெரியும்
பறவைகள்
கிளைகள் இல்லாத
கூடுகள் இல்லாத
இடங்களுக்கு
வருவதில்லையென்று

கறையான் புற்றும்
கரிராக வாழ்வும்
போலத்தான்.
பறவைகளின்று
நிரம்பி வழிகின்றன

எங்கள்
வீதிகளில்
மதில்களில்
செய்தித்தாள்களில்
அறைகளில்


இது எங்களின்
வசந்த காலமல்ல
இருந்தும்

## வேட்பாளர்களுக்கு

வீடு தேடி வந்து வாக்குறுதிகளை
வாரியிறைத்து – எம்
வாக்குகளை பெற்று அதை
எமக்கு வாய்கரிசி யாக்க
நாம் செய்த பாவமென்ன?
வாக்குறுதிகளை தாங்கிய
உங்கள் திருமுகங்களை
தாங்கும் வீட்டு சுவர்கள் செய்த
பாவமென்ன?
அச் சுவரொட்டியை உண்ட
ஆவினங்களும் உங்களைப்போல்
கலப்படப் பாலைத்தான்?
கறக்குமோ?

- பத்மபிரஷன் -
திருக்கோணமலை.

## நூலறிமுகம்




**நூலின் பெயர் :- எங்களையும் இந்த மண்ணில் மனிதராக வாழ விடுங்கள்**

**ஆசிரியர் :- சேனையூர்.அச்சுதன்**

**நூலின் விலை :- ரூபா 200.00**

**வெளியீடு :- மணிமேகலை பிரசுரம்.**

இளம் ஊடகவியளாலரும், கவிஞருமான சேனையூர் அச்சுதனின் இரண்டாவது தொகுப்பாக வெளிவந்திருக்கும் " எங்களையும் இந்த மண்ணில் மனிதராக வாழ விடுங்கள்" என்ற கட்டுரைத் தொகுப்பு தன்னகத்தே 23 கட்டுரைகளை கொண்டுள்ளது.

திருக்கோணமலை மற்றும் மூதூர் பிரதேசங்களில் வாழும் தமிழர்கள் 2005க்கு பின்னர் பட்ட அசாதாரண துன்பங்களை கட்டுரையாக்கியிருக்கும் அச்சுதன் ஈழத்தமிழரின் போராட்டம்,திட்டமிட்ட சிங்கள குடியேற்றம், அகதி வாழ்க்கை, மீள்குடியேற்றம், கிழக்கின் கலாசார சீரழிவு மற்றும் யுத்தம், பேரழிவுகள் போன்றவற்றை கட்டுரைகளில் உள்ளடக்கப்படுத்தியுள்ளார்.

அச்சுதனின் இக்கட்டுரைகள் மிக எளிதான சொற்பிரயோகங்களுடன் பலரையும் வாசிக்கத் தூண்டுகிறது. தமிழர் தம் பிரச்சினைகள் இங்கு சிறியசிறிய பந்திகளால் பதிப்பாக்கம் செய்யப்பட்டுள்ளன. இந்நூல் கடந்த வியாழக்கிழமை 09.08.2012 அன்று திருக்கோணமலை பொதுநூலக கேட்போர் கூட்டத்தில் வெளியிட்டப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிழக்கில் எழுச்சியடையும்...**

கேள்வி : தனித்துப் போட்டியிடுவதால் திருக்கோணமலை மாவட்டத்துக்கு எத்தகைய நன்மைகள் கிடைக்கும்?

பதில் : கிழக்கு மாகாணசபைத்தேர்தலில் தனித்துப் போட்டியிட்டாலும் தேர்தலின் பின் எங்களுக்கு ஐக்கியமான கட்சியோடு ஆட்சியமைக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் தனித்துப்போட்டியிடல் என்ற எமது முடிவு வெற்றியான ஒன்றாகவே இருக்கும் இதன் மூலம் எனது மாவட்டத்துக்கான நன்மைகளை பெறக்கூடும். அத்தோடு 1989 பின் மாகாணசபை தேர்தல்களில் முதல் தடவையாக தனித்து போட்டியிடல் என்பது எமது கட்சியின் பேரம் பேசும் சக்தியை அதிகரிப்பதும் எமது கட்சியையும், சின்னத்தையும் மீள் எழுச்சி செய்வதற்கான ஒன்றாகவே இருக்கும்.

கேள்வி : தேர்தலின் பின் மற்றொரு கட்சியோடு இணையும் முடிவெடுத்தால் எதை கருத்திற் கொள்வீர்கள்?

பதில் : எங்களுக்கு உரிய அதிகாரத்தை வழங்கக்கூடிய அல்லது சிறுபாண்மையினரின் நலனை கருத்திற் கொள்ளக்கூடிய முஸ்லீம் மக்களுக்கு குறிப்பாக தமிழ்பேசும் மக்களுக்கு ஏதாவது கிடைக்குமாக இருந்தால் அக்கட்சியோடு இணைந்து செயற்படதயார்.

கேள்வி : அப்படியானால் இன்னும் எந்தக்கட்சியோடு இணைவது என்பது தொடர்பாக முடிவெடுக்கவில்லையா?

பதில் : இன்னும் திட்டவட்டமான முடிவு எடுக்கப்படவில்லை எமது சமூகம் சார்ந்த நலன்களை பேணக்கூடிய கட்சி ஒன்றோடு ஆட்சியமைக்கத் தயாராக இருக்கிறோம்.

கேள்வி : சமூகம் சார்ந்த நலன் என்று நீங்கள் குறிப்பிடுவது எதனை?

பதில் : முக்கியமாக எமது கிழக்கு மாகாணத்திலே வாழக்கூடிய மக்களினுடைய அபிலாஷைகளை புணரமைப்பு செய்யக் கூடியதாக இருக்கவேண்டும்.

கேள்வி : தனித்துப்போட்டியிடுவதால் கிழக்குமாகாண முஸ்லீம்கள் முழுமையாக உங்கள் கட்சிக்கு வாக்களிப்பார்கள் என்று நம்புகிறீர்களா?

பதில் : நிச்சயமாக ஏனெனில் கடந்த காலங்களில் தேர்தல்களில் ஐ.தே.க உடனோ அல்லது ஐ.ம.சு.கூ உடனோ இணைந்து தேர்தல்களை எதிர்கொண்டிருந்தோம். எனினும் முஸ்லீம் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், குறிப்பாக மதத்தலங்கள் தாக்கப்பட்டமை கலாசாரம் தொடர்பான விடயங்களின் மீது மேற்கொள்ளப்பட்டதாக்குதல்களால் பெரும்பாண்மை கட்சிகளோடு இணைந்திருந்த முஸ்லீம்கள் பிரிந்துநின்று தமது சமூகத்தை காக்க வேண்டும் என்ற தலைப்பில் கிழக்கு மாகாண முஸ்லீம்கள் ஒன்றுபட்டு இ.மு.கா கீழ் அணிதிரண்டுள்ளனர்.

கேள்வி : அண்மையில் கிண்ணியாவில் நடந்த கூட்டமொன்றில் அமைச்சர் ஒருவர் "தற்போதுள்ள அரசாங்கத்தில் தான் முஸ்லீம்கள் கௌரவமாக வாழ்கிறார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். இது பற்றி உங்கள் கருத்து?

பதில் : எந்த அரசில் முஸ்லீம்கள் கௌரவாக வாழ்கிறார்கள் என்பதை அமைச்சர்கள் தங்களுடைய சுயலாபங்களுக்காக சொல்லிவிட்டு செல்லலாம். ஆனால் முக்கியமான கருத்து என்னவென்றால் இது நடைமுறைப்படுத்தப்படுகிறா? என்பது பற்றி மக்கள் சமூகம் தாங்களே தீர்மானித்துக்கொள்ளும். எனவேதான் கிழக்கு மாகாண தமிழர்களதும் முஸ்லீம்களதும் இருப்பைத்தக்க வைப்பதற்கான முக்கிய தேர்தல் ஆகும்.

கேள்வி : முன்னைய கிழக்கு மாகாண சபையில் நீங்கள் பாரபட்சமாக நடத்தப்பட்டதாக கூறினீர்களா?

பதில் : நிச்சயமாக நிச்சயமாக ... ... ...
முன்னைய மாகாணசபை தேர்தலில் ஐ.தே.க வுடன் இணைந்து மாகாணசபை உறுப்பினர்களானோம் அக்காலகட்டத்தில் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட கட்சியோடு நாம் இணைக்கப்பட்டாலும் சில அபிவிருத்தி திட்டங்களில் எம்மை ஓரக்கண்கொண்டே பார்த்தார்கள் உதாரணமாக நாடி நகர சட்டமூலம் ஒன்று புத்தசாசன அமைச்சினூடாக கொண்டுவரப்பட்டது. அது மாகாணசபை அங்கீகரித்து தரவேண்டுமென கேட்டபோது. நாங்கள் சிறுபாண்மை தமிழ் பேசும் மக்களின் எதிர்காலத்தை பாதிக்கும் என்ற வகையில் எதிர்த்தோம் இவ் எதிர்ப்பால் அந்த அரசாங்க பொருளாதார அமைச்சினால் மாகாணசபை உறுப்பினர்களுக்கான "கிராமத்துக்கொரு வேலைத்திட்டம்" என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு மாகாணசபை உறுப்பினருக்கும் 15 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட போது அது எமக்கு ஒதுக்கப்படவில்லை. நாங்கள் அந்த சட்டமூலத்தை எதிர்த்ததால் முற்றாக அதை எமக்கு நீக்கி விட்டார்கள் இதே போல் பல பாரபட்சங்கள் மாகாணசபையில் மு.கா.வுக்கு இடம்பெற்றது.

கேள்வி : இத்தேர்தல் தொடர்பாக மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

பதில் : இத்தேர்தலில் தமிழ் முஸ்லீம் மக்கள் மிக நிதானமாக சிந்தித்து தங்களுடைய சமூகம் சார்ந்த கட்சிகளை பலப்படுத்தினால் தான். எதிர்காலத்தில் ஏனைய சமூகங்களுக்கு ஒரு முன்மாதிரியாக கிழக்கு மாகாணசபையை கொண்டு செல்வதுடன் எமது மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய சந்தர்ப்பமாகத்தான் இதை கருத வேண்டும்.

எனவே இத்தேர்தலில் தமிழ் பேசும் சமூகம் சிந்தித்து வாக்களித்து கிழக்கு மாகாணசபை அதிகாரத்தை கைப்பற்றி குறிப்பாக கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்கள் இணைவதனூடாகத்தான் அதிகாரங்கள் பகிரக்கப்பட்டு தமிழ் பேசும் மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்பை முன்னெடுக்க முடியுமென செவ்வியை நிறைவு செய்தார்.

# வேலைவாய்ப்புக்கள்

## ABANS –திருக்கோணமலை.

திறமைமிகு தொழில்நுட்பவியலாளர்கள்(Skilled Technician)
காற்றுப் பதப்படுத்தலும் குளிரூட்டியும் (Air Conditioning and Refrigeration)

பாடசாலையை விட்டுதற்போது விலகும் மாணவரும் பயிற்சியாளராகச் சேர விண்ணப்பிக்கலாம்

உடனடியாக விண்ணப்பியுங்கள்

Human Resource Manager
Abans (PVT) Ltd,
498, Galle Road,
Colombo – 03

## TATA DIMO திருக்கோணமலை.

TATA வர்த்தக வாகனங்களுக்கான விற்பனை அலுவலர்.

தகமைகள் : G.C.E A/L, ஒரு வருட சந்தைப்படுத்தல் அனுபவம், சாரதி அனுமதிப்பத்திரம்.

பாடசாலையைவிட்டு தற்போது விலகும் மாணவரும் பயிற்சியாளராகச் சேரவிண்ணப்பிக்கலாம்.

# வர்த்தமானி அறிவித்தல்

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப்பரீட்சை 2012 க்கு தகுதியுடைய இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவுத்திகதி 2012.09.03

அனுப்ப வேண்டிய முகவரி :- பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்
பரீட்சைக்கிளை
இலங்கை பரீட்சைச் திணைக்களம்
பெலவத்தை
பத்தரமுல்ல.

கல்வித்தகமைகள் :- (அ) கல்விப் பொதுத் தராதர(சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலமொழி, கணிதம் அவற்றுடன் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் உரே தடவையில் (06) பாடங்களில்,

(ஆ) கல்விப் பொதுத் தராதர பத்திர(உயர் தரம்) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு பாடமாவது (சாதாரண பொதுபரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்.

தொழில் ததகமைகள் :- சம்மந்தப்பட்ட துறையில் பெற்றுக் கொண்ட தொழில்சார் தகைமைகள்,மேலதிக தகமையாக கருதப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## Sunday Observer:

### 440,000 மக்கள் மீள் குடியேற்றப்பட்டமையை பாராட்டிய ஐ.நா.சபை

இலங்கைக்கான தனது மூன்று நாள் பயணத்தை நிறைவு செய்த ஐ.நா.சபையின் மனிதாபிமான உதவிகளுக்கான இணைப்பக இயங்குறுப் பட்டமை பாராட்டத்தக்கதாக அமைந்துள்ளதாய் தெரிவித்துள்ளார். அவரது கூற்றுப்படி" கடந்த மூன்று முக்கிய வருடங்களில் இலங்கை அடைந்த அடைவுகள் முக்கியமாக மீள்குடியேற்றத்திலும், உள்ளகக் கட்டுமான விருத்தியிலும் குறிப்பிடத்தக்கதாக இருப்பதுடன் தெளிவாக வெளித்தெரியக் கூடியதாய் இருப்பதாயும்" குறிப்பிட்டார்.

### நவீன புகைப்படக்கருவிகள் வீதிப்போக்குவரத்து விபத்துக்களை கண்காணிக்கும்

காவல்துறைத் திணைக்களம் வீதிப்போக்குவரத்து விபத்துக்களை கண்காணிப்பதற்கு நவீன புகைப்படக் கருவிகளை இறக்குமதி செய்யவுள்ளதாக காவல்துறை ஊடகப் பேச்சாளரின் குறிப்பு தெரிவிக்கின்றது.

இப் புகைப்படக்கருவிகள் நாடெங்கும் விநியோகிக்கப் படவுள்ளன. இப்படங்கள் விபத்துக்கள் தொடர்பான சான்றுகளாக நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

### இலங்கையில் திரவப் பாலுற்பத்தியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி

கடந்த வருடத்தில் இலங்கையின் திரவப்பாலுற்பத்தி குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்திருந்தது பதியப்பட்டுள்ளது. 550,000 லீற்றருக்கு மேற்பட்ட திரவப்பால் கடந்த வருடத்தில் சேகரிக்கப்பட்டிருந்தது.

எனினும் மக்கள் இறக்குமதி செய்யப்படும் பால்மாவிற்குப் பழக்கப்பட்டிருப்பது திரவப்பால் உள்நாட்டு உற்பத்திக்கும், விற்பனைக்கும் பெரும் சவாலாய் அமைந்துள்ளது.

### தேர்தல் பரப்புரையில் சனாதிபதி

ஆகஸ்ட் 18ம் திகதிநடைபெறவுள்ளதேர்தல் பரப்புரையில் இலங்கையின் சனாதிபதி அனுராதபுரத்தில் கலந்து கொள்ளவுள்ளார்.

### புதிய விமானசேவைகள் பல இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் எரிபொருளுக்குக் கோரிக்கை.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் தெரித்ததின் படிபிரித்தானிய வான்பரப்புக் கம்பனி உட்பட பலவிமான சேவைகள் தமது விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பித் தரும்படி தம்மைக் கேட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

## The Sunday Leader

### இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் கையறுநிலை பலமில்லியன் ரூபாய் வங்கிக்கடன்

இலங்கை வங்கி இதுவரை காலமும் சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிவந்த வங்கி மேலதிகப்பற்று வசதியினை இடைநிறுத்தியுள்ளது. சுமார் 175 மில்லியன் ரூபாய் கடனாகவும், வட்டியாகவும் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தால் இலங்கைவங்கிக்குச் செலுத்தப்பட வேண்டியிருப்பதே இதற்குக் காரணமாகும்.

இந்த வருட ஆரம்பம்வரை கொடுப்பனவுகளை ஒழுங்காகச் செலுத்திவந்த இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனம் கடந்த இரு மாதங்களில் பெருமளவு காலாவதியாகிவிட்ட சீமெந்தினை இறக்குமதி செய்ததால் அவை சந்தைப்படுத்த முடியாமல் தேங்கிக் கிடக்கின்றன. இத்தேக்கம் நிறுவனத்தின் நிதி நிலமையை கடுமையாக பாதித்ததால் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தால் வங்கிக்குச் செலுத்தவேண்டிய கொடுப்பனவுகளை செலுத்தமுடியாமல் போய்விட்டது. எனவேதான் இலங்கைவங்கி சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிவந்த வங்கிமேலதிகப்பற்றினை இடைநிறுத்தியுள்ளது.

### மேலும் பதின்நான்கு வானூர்திகளைக் கொள்வனவு செய்யும் விமானப்படை

2010 ஆம் ஆண்டில் ரஷ்யாவுடன் மேற்கொள்ளப்பட்டகடன் ஒப்பந்தத்திற்கமைவாக இன்னும் 300 மில்லியன் அமெரிக்கடொலர்கள் பாவிக்கப்படாதிருப்பதால் அத்தொகைக்கு பதின்நான்கு Mi 171 ரக உலங்கு வானூர்திகளை விமானப்படை கொள்வனவு செய்யும் முயற்சியிலுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்தார்.

உள்ளூரில் பயணிகள் உலங்குவானூர்தி சேவையை மேற்கொள்ளும் எண்ணத்துடனேயே இவை கொள்வனவு செய்யப்படப்போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


திருக்கோணமலையிலிருந்து வாராந்தம் ஞாயிற்றுக்கிழமைகளில் வெளிவரும் மலைமுரசு பத்திரிகையில் உங்கள்

விளம்பரங்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், திருமண நாள் வாழ்த்துக்கள், சாதனையாளர் வாழ்த்துக்கள், மரண அறிவித்தல்கள், நினைவு நாட் குறிப்புக்கள், அந்தியேட்டி அழைப்பிதழ்கள், பெருநாள் வாழ்த்துக்கள்

போன்றவை இடம்பெற வேண்டுமா?



தொடர்புகளுக்கு

அலுவலகம்- 159A, 2nd floor, Sea view Road, Trincomalee. 077 0180218

விளம்பர முகவர்- 58, Vidyalayam Road, Trincomalee. 077 366 3103


### தொழிநுட்பத்திற்கும் மருத்துவத்திற்குமான தெற்காசிய கல்வி நிறுவனம் - ஒரு கனவு (SAITM) (South Asian Institute of Technology & Medicine)

SAITM நிறுவனத்தில் கல்வி கற்ற/ கற்றுக்கொண்டிருக்கும் சில மாணவர்களும் பெற்றோர்களும் அந்நிறுவனத்திற்கெதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் தமக்குத் தீங்கிழைக்கப்பட்டுள்ளதாகவும் அத்தீங்கிலிருந்து தங்களைக் காப்பாற்றுமாறும் முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கையில் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்டு உயர்கல்வி அமைச்சின் அனுசரணையுடன் இயங்கி வந்த தனியார் மருத்துவக் கல்லூரியே SAITM ஆகும்.

பெற்றோர் ஒருவரின் கூற்றுப்படி தற்போது வரை SAITM நிறுவனத்தின் மருத்துவப்படிப்பினை இலங்கை வைத்தியர் சங்கம் (SLMC) (Srilanka Medical Council) அங்கீகரிக்கவில்லை. பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு SAITM நிறுவனத்திற்கு மருத்துவப் பட்டப்படிப்பை வழங்கும் தகுதியைக் கொடுத்திருந்தாலும் இலங்கையின் வைத்தியர் சங்கம் அதனை ஏற்றுக் கொள்ளாததால் இப்பட்டப்படிப்பு வீணானது என அவர் கூறினார்.

ஆகஸ்ட் 30ந் திகதி கடுவலை நீதிமன்றத்தில் இவ்விடயம் தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. மற்றொரு பெற்றோரின் கூற்றுப்படி SAITM நிறுவனமானது பல்கலைக்கழக மானிய விதிகளை மதித்து நடக்காதிருப்பதுடன் இலங்கை வைத்தியர் சங்கத்தினால் இப்பட்டப்படிப்பு மேற்பார்வை செய்யப்படாமலிருப்பதும் இந்நிறுவனத்தில் கல்விகற்கும் குழந்தைகளின் எதிர்காலத்தைப் பாதிப்பதுடன் SAITM நிறுவனத்தின் பட்டப்படிப்பை உறுதிசெய்யும் எனக் கூறப்பட்ட ரஷ்ய பல்கலைக்கழகமும் அங்கீகரிக்கவில்லையெனக் கூறினார்.

## The Sunday Times:

### அரசின் கொள்கையில் மாற்றம் - நவநீதம் பிள்ளையும் அவரின் அணியும் இலங்கைக்குள் வருகின்றனர்.

ஐக்கியநாடுகள் சபையின் மனிதஉரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் நவநீதம் பிள்ளையும் அவரது அணியும் அடுத்த மாதமளவில் இலங்கைக்கு வரவிருக்கின்றனர். இலங்கையின் இனப்பிரச்சனை தீர்வுக்காக அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்குவதற்காக இவர்கள் உள்நுழைகின்றார்கள்.

பலதடவைகள் இலங்கை அரசாங்கம் இவர்களுடைய வருகையை எதிர்த்திருந்தாலும் தற்போது அரசு இவர்களுடைய வருகையை ஏற்றுக்கொண்டுள்ளது.

### தரமற்றஎரிபொருளால் மேலும் பலவாகனங்கள் பாதிக்கப்பட்டன.

கடந்த சிலநாட்களில் பெருமளவு டீசல் வாகனங்கள் தரமற்ற டீசல் பாவனையால் பழுதை எதிர்நோக்கின. சுமார் 20000 தொன் தரமற்ற டீசல் சந்தைக்குள் நுழைந்ததால் இந்தநிலை எழுந்துள்ளது.

VITOL எனும் நிறுவனத்திடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மேற்படி டீசலே தரமற்றவையாக இருப்பதாக தெரியவந்துள்ளதால் அதை உறுதிசெய்யும் வரை இந்நிறுவனம் "கறுப்புப் பட்டியலில்" இடப்பட்டுள்ளது.

2009ல் இதே நிறுவனம் கறுப்புப் பட்டியலில் இடப்பட்டபோதும் 16.8 மில்லியன் ரூபாய்களை நட்டஈடாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தி தனது பெயரை கறுப்புப் பட்டியலில் இருந்து நீக்கியிருந்தது.

பழுதடைந்த வாகனங்களுக்குள் பயணிகள் வாகனங்களும், புகையிரத எந்திரங்களும் அடங்கும்.

ஏற்கனவே ஜூன் 2011 இலும் மே 2012 இலும் தரமற்ற எரிபொருள் இறக்குமதி இலங்கையில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

**உங்கள் கேள்விகளுக்கு மலைமாடன் பதில் தருகின்றார். கேள்விகளை மலைமுரசிற்கு தபாலிலோ அல்லது மின்னஞ்சலிலோ அனுப்பிவையுங்கள்.**

மின்னஞ்சல் - malaimurasu@hotmail.com

தபால் முகவரி - 159A, 2nd Floor, Sea view Road, Trincomalee.

மலைமுரசுடன் இலத்திரனியல் தொடர்பாடலை மேற்கொள்ள நீங்கள் அஞ்சலிட வேண்டிய முகவரி

malaimurasu@hotmail.com

செய்திகளை உடனுக்குடன் தெரிவிக்க

0770180218

0754252042


SUGIRTHA STATIONERS

சகல விதமான பாடசாலை உபகரணங்கள் நிறுவன உபகரணங்கள் என்பவற்றை நியாய விலையில் பெற்றுக்கொள்ள

295A, Court Road, Trincomalee.

Tel: 0264905921, 0775154336

Fax: 0264595374


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கோணமலை, இலிங்கநகர் அருள்மிகு ஸ்ரீராகவேந்திரர் ஆலய தேர்உற்சவம் திங்கட்கிழமை 06.08.2012 காலை இடம் பெற்றது. இறைவன் தேரில் ஆரோகணித்திருப்பதையும் குழந்தைகள் கலை நிகழ்வுகளை நிகழ்த்துவதையும் படங்களிற் காணலாம்.

### தோண்டப்பட்ட நீதிமன்ற வீதி...

கடந்த 05.08.2012 காலையில் மகிழூந்து ஒன்று இத்தெருவில் விபத்துக்குள்ளாகியிருப்பதைப் பாருங்கள். வீதித் தடைகள் எவையுமில்லாது இருந்ததால் இப் பெருவீதிக்குள் பயணம் செய்ய முடியும் என தான் நினைத்தாக மேல் மாகாணத்தைச் சேர்ந்த அம்மகிழூந்தை செலுத்திய சாரதி தெரிவித்தார்.

வர்த்தகர் ஒருவரைப் பேட்டிகண்டபோது "மூன்றுமாதங்களில் முடித்துத் தரப்படவேண்டிய இவ் வேலை இவ்வாண்டின் தை மாத இறுதிக்கிழமையில் ஆரம்பிக்கப்பட்டதாகவும் இன்றுவரை கிண்டப்பட்டுக் குண்டும் குழியுமாகக் கிடப்பதாகவும்" தெரிவித்தார்.

மற்றொரு வர்த்தகர் தெரிவிக்கும் போது "வெக்கோ இயந்திரத்தால் தெருவைத் தோண்டிய அன்று நீர்வழங்கும் குழாய்கள் யாவும் உடைந்ததாகவும் அடுத்த சில நாட்களுக்கு நீர்வழங்கல் தடைப்பட்டு தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டதாகவும்" தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் "நீர்வழங்கல் மற்றும் மின்சார இணைப்புக்கள் தொடர்பாய் திட்டமிடப்படாமல் தோண்டப்பட்டதால் பெரும் சிரமங்களைதாம் எதிர்கொண்டதுடன் தமது வர்த்தகமும் பாதிக்கப்பட்டுள்ளதாக" தெரிவித்தார்.

கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் வடிகான்களில் தேங்கியுள்ள நீரிலிருந்து டெங்கு நுளம்பு பரவும் அபாயம் காணப்படுகின்றது. மேலும் துர்நாற்றம் வீசுவதையும் நுகரலாம்.

இத்திட்டத்தை அமுலாக்கும் நிறுவனமான திருக்கோணமலை நகரசபை விரைந்து இப்பிரச்சனைக்குத் தீர்வைக் காணவேண்டும் என்பதே மலைமுரசின் வேண்டுகோளாகும்.

### தமது மனசாட்சியை ...

உவர்மலை இளைஞர்களுடன் கடந்த வாரம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இக்கருத்துக்களை வெளியிட்டார் மேலும் சர்வதேச சமூகமும், புலம்பெயர் தமிழர்களும் இலங்கை வாழ் தமிழ் மக்களின் உரிமைக்குரலாக தமிழ்தேசிய கூட்டமைப்பையே கருதுகின்றனர் என்றும் கிழக்கு மாகாண சபையின் அதிகாரம் தமிழனின் கையில் இருக்கும் என்றால் தமிழர்களின் எதிர்காலம் சிறப்பானதாய் அமையும் என்றும் குறிப்பிட்ட நித்திமாஸ்டர் கிழக்கு மாகாண சபை தமிழ் தேசிய கூட்டமைப்பின் கையில் வரப்போவது உறுதியாகிவிட்ட நிலையில் எதிர்வரும் செப்டம்பர் 8 ஆம் திகதி நடைபெறும் தேர்தலில் எமது வாக்குகளை தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு வழங்கி எமது ஒற்றுமையை சர்வதேசத்துக்கும் பேரினவாத கட்சிகளுக்கு துணை போனவர்களுக்கும் காட்டுவோம் என் மேலும் குறிப்பிட்டார்.

### கிழக்குப் பல்கலைக் ...

நிர்வாகச் சிக்கல்களால் கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகம் திருமலை வளாகத்தைச் சரியான முறையில் கவனிப்பதில்லை என குற்றஞ் சாட்டியே இவர்கள் தொடர் ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை திருமலை வளாக முன்றலில் ஆரம்பமான இவ் ஆர்ப்பாட்டம் புதன்கிழமை 08.08.2012ல் திருமலை பிரதான பேரூந்து நிலையத்திற்கு முன்பாகவும் திருமலை வளாகத்தின் ஆண்கள் விடுதிக்கு முன்பாகவும் நடாத்தப்பட்டது.

### கிண்ணியாவின் வரவேற்புக்...

கைத்தொழில் மற்றும் முதலீட்டமைச்சரின் ஐம்பதுலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட இக்கோபுரக் கட்டுமாணப் பணிகளின் பொருட்டு திருகோணமலை மட்டக்களப்பு நெடுஞ்சாலை கட்டுமானப் பிரதேசத்தில் மணல் வீதியூடாக வழிநடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தற்போதைய அரசு மட்டுமே முஸ்லிம்களை கௌரவமாக வாழ வைக்கும் - அமைச்சர் ரிசாட்

கிழக்கு மாகாணசபை தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வில் கிண்ணியாவில் கலந்துகொண்ட அமைச்சர் தற்போதைய அரசு மட்டுமே முஸ்லிம்களை கௌரவமாக வாழவைக்கும் அரசு என குறிப்பிட்டார். மேலும் நாடாளுமன்றத்தில் பெரும்பாண்மையைக் கொண்டுள்ள இந்த அரசினால் மட்டுமே கிழக்கு மாகாண முதலமைச்சரைப் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் கூறினார்.

முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் சில தற்காலத்தில் நடந்தேறிய போது சனாதிபதியுடனும், அமைச்சரவையிலும் தன்னந்தனியாக குரல் கொடுத்தது நானே எனக் கூறிய அமைச்சர் வேற சில அமைச்சர்கள் இத் தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்பாக தமது கவலையை வெளியிட்டதாகவும் குறிப்பிட்டார்.

### தூக்கில் போடுவதற்கு கடும் போட்டி

இலங்கையின் நீதிமன்றங்களால் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களை தூக்கிலிடும் பதவிக்காக அண்மையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. வெற்றிடமாகவுள்ள இவ் ஒரு இடத்தை நிரப்புவதற்கு தற்போது வரை 175 விண்ணப்பங்கள் கிடைக்கப்பட்டுள்ளன.

The Sunday Leader பத்திரிகையின் நிருபர் ஒருவர் அவர்களில் சிலரைப் பேட்டிகண்டு, அவர்களில் ஒருவர் வெளிப்படுத்திய மனவுணர்வை பின்வருமாறு வரைந்துள்ளார்.

- ச(Ch)மிந்தகுமார– 24 வயது

மாதாந்த சம்பளத்தைப் பெறுவதற்காகவே நான் இவ்வேலைக்கு விண்ணப்பித்துள்ளேன். எனக்குத் தெரியும் 1976ற்குப் பின் எவருமே எமது நாட்டில் தூக்கிலிடப்படவில்லை. ஆகவே எனது வேலைக்காலத்தில் நான் எவரையுமே தூக்கிலிடத் தேவையில்லை. ஆனாலும் என்னால் தூக்கிலிட முடியும். எனது ஒன்பதாம் வகுப்பு படிப்புடன் பாடசாலையை விட்டுவிலகி தற்போதுவரை இறைச்சி வெட்டுபவனாகவே நான் வேலை செய்கின்றேன்.

### பதினெட்டு வயது முதல்...

வேண்டிய ஒரு முக்கியமான விடயம் யாதெனில் எமது திருக்கோணமலை மாவட்டமானது இன விகிதாசார அடிப்படையில் மூலின மக்களும் ஏறக்குறைய சமமான சனத்தொகையை கொண்டுள்ளது. இவ்வேளையில் நாம் நமது வாக்குகளைப் பதிவு செய்யாமல் இருப்பது தமிழ் இனத்தை சிறுமைப்படுத்தும். செயலாக மட்டும் இல்லாமல் எம்மை அடக்கியாளும் பேரினவாதத்தின் கரங்களை பலப்படுத்தியும்விடும்.

எனவே பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியினராகிய நாங்கள் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதில்லை என்று முடிவு செய்தள்ளோம். இத் தருணத்தில் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழர்கள் அனைவரும் ஒரு அணியின் கீழ் என்பதை இலங்கை அரசும், சர்வதேச சமூகமும் புரிந்து கொள்வதற்காக 18 வயது முதல் தாத்தா, பாட்டி வரை தவறாமல் தங்கள் வாக்குகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வீடு சின்னத்திற்கு அளிக்க வேண்டும் என்றும் எமது அனைத்துத் தோழர்களும் தமிழ்த் தேசியக் கட்டமைப்பு வெற்றி பெற உறுதியுடன் செயற்படவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கடலில் எச்சரிக்கை...

மாலை இக்கடல் பரப்பில் நீராடச் சென்ற என்.இர்பான்.எவ்.றிபான்.ஜே.ஸஹீ ஆகிய மூவர் நீர் சுழியில் சிக்குண்டு மூச்சுத் திணறி மரணமாகினர்.

இவ்வாறான உயிர் இழப்புக்கள் முன்பும் பல இடம் பெற்றுள்ளன. நீர் சுழிகள் மற்றும் சேறு சகதிகள் கொண்ட இடமாக இக் கடல் முனைப் பகுதி காணப்படுகின்றது.மக்கள் இக்கடல் பரப்பில் நீராடுவது முற்றாக தடை செய்யப்பட வேண்டும். இவ் விழிப்புணர்வு உயிர் இழப்புக்களை, கடல் விபத்துகளை தவிர்க்க வழிசமைக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

## நினைந்தழுதல்

**கண்ணீர்க் குறிப்புக்கள்**



**அமரர் கணபதி கைலாயபிள்ளை அவர்கள்**

06.08.2012ல் இயற்கையெய்தினார். அன்னார் மூதூரைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்டவர். தமிழ்வாணன் (கி.மா கால்நடை அபிவிருத்தி சுகாதாரத் திணைக்களம்) தமிழ்வதனி (மூதூர் புனித அந்தோனியார் மகாவித்தியாலயம்), ரதன் (கி.மா நீர்ப்பாசனத் திணைக்களம்) தாட்சாயினி (கி.மா. கல்வித் திணைக்களம்) ஆகியோரின் தந்தையும் ஆவார். அவரது உடல் திருமலை இந்து மயானத்தில் 07.08.2012ல் அடக்கம் செய்யப்பட்டது என்பதை அறியத்தருகின்றோம்.

**தகப்பனாரின் சாவுச்செய்தியால் மனமுடைந்திருக்கும் தமிழ்வாணனிற்கும் குடும்பத்தவர்க்கும் எம் ஆழ்ந்த அனுதாபங்கள்.**

நண்பர்கள்
உயர்தேசியகணக்கியல் திப்புளோமா
1996 பிரிவு.

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டலில் இல் 12. 08. 2012ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org